


**27. 07. 2025**

தலைப்பு செய்திகள்

- **பிரதமர் திரு.நரேந்திரமோடி, கங்கைகொண்ட** சோழபுரத்தில் ஆடிதிருவாதிரை முப்பெரும் விழாவில் தற்போது பங்கேற்று வருகிறார்.

- **நம்தேசம் புதுப்பிக்கப்பட்ட அறிவியல் சக்தியுடன்** முன்னேறி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பெருமிதம் தெரிவித்தார்.

- **தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்களை** நமோசெயலி மூலம் மக்கள் பதிவிட வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

- **மேட்டூர் அணையிலிருந்து** 75 **ஆயிரம் கனஅடி** தண்ணீர் தற்போது வெளியேற்றப்படுவதால் 11 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ளஅபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- **மான்செஸ்டரில் இங்கிலாந்துக்கு எதிரான** 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தோல்வியை தவிர்க்க இந்தியா போராடி வருகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

**பிரதமர் திரு.நரேந்திரமோடி, கங்கைகொண்ட** சோழபுரம் பெருவுடையார் ஆலயத்தின் ஆடித்திருவாதிரை விழாவில் சிறப்பு வழிபாடுகளை இன்று மேற்கொண்டார்.

பெருவுடையார் திருக்கோவில் கட்டமைப்பின் ஆயிரமாவது ஆண்டுவிழா, மாமன்னன் முதலாம் ராஜேந்திரனின் ஆயிரமாவது பிறந்தநாள் விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்த ஆயிரமாவது ஆண்டு விழா என்ற முப்பெரும் விழாவில் பங்கேற்றுள்ள பிரதமர், வழிபாடுகளுக்கு பின்னர் பெருவுடையார் கோவில் வளாகத்தில் சிறிது நேரம் தியானம் மேற்கொண்டார்.

காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட கங்கை நீரைகொண்டு சோழீஸ்வரருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார்.

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருகை தந்த பிரதமருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

தேவார திருவாச பதிகங்களை பாடி ஓதுவார்கள் பிரதமரை வரவேற்றனர்.

சோழீஸ்வரர் கோவில் கட்டப்பட்ட வரலாறு, மாமன்னர் ராஜேந்திரனின் வரலாற்று சிறப்புகளையும் பிரதமர் கேட்டறிந்தார்.

தொல்பொருள் ஆராய்ச்சி துறை சார்பில் சோழர்களின் சைவ சித்தாந்தம் மற்றும் கட்டடக்கலையை பிரதிபலிக்கும் புகைப்பட கண்காட்சியையும் சிற்ப வேலைப்பாடுகளையும் பிரதமர் பார்வையிட்டார்.

ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிடுகிறார்.

**முன்னதாக** கங்கை கொண்ட சோழபுரத்திற்கு பாரம்பரிய உடையுடன் ஹெலிகாப்டரில் வந்திறங்கிய பிரதமருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

இதனைத் தொடர்ந்து சாலைப்பேரணியில் பங்கேற்ற பிரதமருக்கு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்து தெரிவித்தனர்.

திருச்சியிலிருந்து இன்றுகாலை கங்கை கொண்ட சோழபுரம் செல்வதற்காக விமான நிலையம் வரை சாலை பேரணியாக பிரதமர் வாகனத்தில் சென்றபோது மாநகரத்தின் சாலைகளில் திரண்டு இருந்த பி.ஜே.பி. தொண்டர்களும் பொது மக்களும் பிரதமரை ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து விமான நிலையம் சென்ற பிரதமர் ஹெலிகாப்டர் மூலம் கங்கைகொண்ட சோழபுரம் சென்றடைந்தார்.

❖❖❖❖❖❖❖

**மன் கீ பாத்**

முன்னதாக மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர், 21-ம் நூற்றாண்டில் அறிவியலின் புதுப்பிக்கப்பட்ட சக்தியுடன் நாடு முன்னேறி வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

இந்திய விமானப்படை குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா விண்வெளியிலிருந்து, பூமியில் பாதுகாப்பாக தரையிறங்கிய போது ஒட்டுமொத்த நாடும் பெருமைப்பட்டதாக குறிப்பிட்ட பிரதமர், சந்திரயான் - 3 விண்கலம் நிலவில் தரையிறங்கியது நாட்டில் புதிய சூழலை உருவாக்கியதை நினைவுகூர்ந்தார்.

அறிவியல் மற்றும் விண்வெளி துறையில் மாணாக்கரின் புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் **Inspire Manak** திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் இத்திட்டத்தின் கீழ் பள்ளிகள் தோறும் 5 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் புதிய யோசனைகள் ஊக்குவிக்கப்படுவதாக கூறினார்.

விண்வெளித்துறையில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 200-ஆக அதிகரித்துள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

**தேசிய விளையாட்டு தினம் அடுத்தமாதம்** 23-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், மக்கள் நமோசெயலி மூலம் இந்நாளில் தங்களது கொண்டாட்டங்களை பதிவிட வேண்டும் என்று கூறிய பிரதமர், துபாய் மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச வேதியியல், கணித ஒலிம்பியாட் போட்டிகளில் பதக்கங்களை வென்று, இந்திய மாணவர்கள் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக தெரிவித்தார்.

வானியல் மற்றும் வான்இயற்பியல் ஒலிம்பியாட் போட்டிகள் அடுத்தமாதம் மும்பையில் நடைபெற உள்ளதாகவும், இதில் 60-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த மாணாக்கர் பங்கேற்கவுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

**மஹாராஷ்டிராவிலுள்ள** 12 மராட்டிய **கோட்டைகளை** உலக பாரம்பரிய தளங்களாக யுனெஸ்கோ அங்கீகரித்து உள்ளதை குறிப்பிட்ட பிரதமர், நாடுமுழுவதும் வானிலை மாறுபாடுகள் மற்றும் இயற்கை பேரிடர்களை எதிர்கொண்டு இன்றளவும் பல்வேறு கோட்டைகள் உறுதியுடன் உள்ளதாக எடுத்துரைத்தார்.

இளைஞர்கள் இத்தகைய கோட்டைகளுக்கு சென்று அவற்றின் வரலாற்று பாரம்பரியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று பிரதமர் அறிவுறுத்தினார்.

**எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தை புரட்சி மாதம் என** குறிப்பிட்ட பிரதமர், தேசப்பிதா மகாத்மா காந்தி தலைமையிலான வெள்ளையனே வெளியேறு இயக்கம், சுதேசி இயக்கம் உள்ளிட்ட பல்வேறு புரட்சிகள் இம்மாதத்தில் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

தேசிய கைத்தறி தினம் வரும் 7-ம் தேதி கொண்டாடப்பட உள்ளதை எடுத்துரைத்த பிரதமர் 1905-ம் ஆண்டு இதேநாளில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப்படுவதாக கூறினார்.

இந்த இயக்கம் உள்ளூர் பொருட்களுக்கு குறிப்பாக கைத்தறி ரகங்களுக்கு புதிய சக்தியை அளித்ததாக தெரிவித்த பிரதமர், ஜவுளித்துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றுவதாகவும், இளம் தலைமுறையினர் கைத்தறி தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள முன்வரவேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

நாட்டின் கலாச்சார பன்முகத் தன்மையை ஜவுளித்துறை உலகிற்கு எடுத்துரைப்பதாக கூறியஅவர், கிராமப்புற பெண்கள், வடிவமைப்பாளர்கள், நெசவாளர்கள், இளைஞர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் தற்போது ஜவுளி சந்தை வேகமாக வளர்ச்சி கண்டுவருவதாக கூறினார்.

வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே வாங்கவும், விற்கவும் பொதுமக்கள் உறுதிக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார்.

**நம்நாட்டின் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும்** வகையில் பண்டிகைகள் மற்றும் மரபுகள் திகழ்வதாக கூறிய பிரதமர், நிகழ்காலம் மற்றும் கடந்தகால நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

**அறிவியல், மருத்துவம், இசை, தத்துவம் குறித்த தவகல்கள்** பண்டைய கையெழுத்து பிரதிகளில் பாதுகாக்கப்படுவதாக கூறிய பிரதமர், தமிழ் பனைஓலை கையெழுத்து பிரதிகளை வாசிக்க தமிழ்நாட்டின் தஞ்சாவூரை சேர்ந்த மணிமாறன் மாலைவகுப்புகள் நடத்துவதை பாராட்டினார்.

இத்தகைய முயற்சிகள் புதிய தலைமுறையினரிடையே பண்டைய நாகரீக மற்றும் கலாச்சாரத்தை கொண்டுசெல்லும் என்று குறிப்பிட்ட பிரதமர், கியான் பாரத் மிஷன் இயக்கத்தின் கீழ் தற்போது பண்டைய கையெழுத்து பிரதிகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இதற்கென பிரத்யேக டிஜிட்டல் களஞ்சியம் உருவாக்கப்பட உள்ளதாகவும் பொதுமக்கள் mygov செயலிமூலம் தங்களது உள்ளீடுகளை பதிவிடலாம் என்றும் குறிப்பிட்டார்.

**அசாம், காசிரங்கா தேசிய பூங்காவில் முதன்முறையாக** நடத்தப்பட்ட புல்வெளி பறவைகள் கணக்கெடுப்பில் 40-க்கும் மேற்பட்ட பறவையினங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக கூறியஅவர், பல்லுயிர் பெருக்கத்தின் உலகளாவிய அங்கீகாரத்தை அதிகரிக்க இத்தகைய முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்றார்.

**அமெரிக்காவில் நடைபெற்ற உலக காவல் மற்றும் தீயணைப்பு** விளையாட்டு போட்டிகளில் இந்தியா 609 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளதாக அறிவித்த பிரதமர், இப்போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

அடுத்த உலக காவல் மற்றும் தீயணைப்பு விளையாட்டு போட்டிகள் வரும் 2029-ம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்றார்.

**விளையாட்டுத்துறையில் இந்தியாவை வல்லரசு நாடாக** உருவாக்க கேலோ பாரத் நிதி 2025 உருவாக்கப்பட்டதற்கு இளம் விளையாட்டு வீரர்களின் பெற்றோர் பாராட்டு தெரிவித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

**தூய்மை இந்தியா இயக்கம் 11 ஆண்டுகளை நிறைவு செய்யும்** தருவாயில் நாடுமுழுவதும் 4 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட நகரங்களில் இது ஒருமக்கள் இயக்கமாக மாறியுள்ளதாக தெரிவித்த பிரதமர், நீர்நிலைகள் தூய்மைப்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக கூறினார்.

கிருஷ்ண ஜெயந்தி, நாகபஞ்சமி, ரக்ஷா பந்தன் உள்ளிட்ட பண்டிகைகளுக்கு பிரதமர் நாட்டுமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

**இதனிடையே தமிழ் பனைஓலை கையெழுத்து** பிரதிகளை வாசிக்க மாலை வகுப்புகள் நடத்துவதற்கு பிரதமர் தம்மை பாராட்டியது மகிழ்ச்சி அளிப்பதாக தஞ்சாவூரை சேர்ந்த மணிமாறன் தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**அணைகள்**

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதன்** முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ள நிலையில் அணைக்கு வரும் உபரிநீர் முழுவதுமாக வெளியேற்றப்படுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

**திருப்பூர் மாவட்டம் அமராவதி அணை** அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் அணைக்கு வரும் 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் முழுவதுமாக வெளியேற்ற படுவதையடுத்து திருப்பூர், கரூர் மாவட்ட ஆற்றங்கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து 16 ஆயிரத்து** 597 கனஅடியாக அதிகரித்துள்ள நிலையில் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது.

திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக அங்கு சுற்றுலா பயணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

**அப்துல் கலாம்**

**முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.** அப்துல் கலாமின் 10-வது ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

சிறந்த தேச பக்தராகவும், தொலைநோக்கு பார்வை கொண்ட தலைச்சிறந்த அறிவியலாளராகவும், ஆலோசகராகவும் அவர் என்றென்றும் போற்றப்படுவார் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

அறிவியல் பணிகளில் இளையோரை ஒருங்கிணைக்க உந்து சக்தியாக திகழ்ந்தவர் டாக்டர் கலாம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் கலாமின் நினைவுதினத்தை ஒட்டி ராமநாதபுரம் மாவட்டம் பேய்க்கரும்பில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிம்ரன் ஜித் காலோன் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**மான்செஸ்டரில் இங்கிலாந்துக்கு எதிரான** 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தோல்வியை தவிர்க்க இந்தியா போராடி வருகிறது.

நேற்றைய 4-ம் நாள் ஆட்ட இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்திருந்தது.

சுப்மன் கில் 78 ரன்னுடனும், கே.எல்.ராகுல் 87 ரன்னுடனும் களத்தில் உள்ள நிலையில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க மேற்கொண்டு 137 ரன் எடுக்க வேண்டிய நிலையில் 5-ம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

இந்தியா 358 இங்கிலாந்து 669

❖❖❖❖❖❖❖

**செஸ்**

**ஜார்ஜியாவில் நடைபெற்ற கொனேரு ஹம்பி** - திவ்யா தேஷ்முக் இடையேயான ஃபிடே மகளிர் செஸ் உலக சேம்பியன்பட்ட முதல் இறுதியாட்டம் டிராவில் முடிவடைந்தது.

2-வது இறுதி ஆட்டம் இன்று நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖